பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 10 வியாழக்கிழமை 24.06.2021 கதிர் 97

## 24 மணிநேரத்தில் 442 பேர் சிக்கினர்

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 442 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இன்று காலை தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல்

2

# தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் இன்று விடுதலை

### பொசன் பூரணை தினத்தில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு


இன்று காலை விடுவிக்கப்பட்ட 07 தமிழ் அரசியல் கைதிகள் அநுராதபுர சிறையல் இருந்து பஸ்ஸில் யாழ் கூட்டி வரப்பட்டு நகரில்விடுவிக்கப்பட்டனர்.



(ந. லோகதயாளன், இ.கலையமுதன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க சந்தேகநபர்கள் 16 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் இன்று விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 93 சிறைக் கைதிகள் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2

விடுவிக்கப்பட்ட கைதிகளின் பெயர் விவரம் 02 ஆம் பக்கத்தில்

## முற்றாக முடக்கப்பட்டன மேலும் ஏழு கிராமங்கள்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் 7 கிராம சேவகர் பிரிவுகள் இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் குருநகர் மேற்கு , ரெக்லமேசன் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி

2

## மரணதண்டனைக் கைதியான துமிந்த சில்வாவும் விடுதலை!

### ஜனாதிபதி விசேட பொதுமன்னிப்பு



மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவும் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பில் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்

2

## நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது

### பாரத லக்ஸ்மனின் மனைவி சாபம்; துமிந்தவின் விடுதலைக்கு எதிர்ப்பு



கொலையாளியை விடுதலை செய்து, நீதியை சிறை வைத்துள்ளனர். நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது.

- இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற

2

## ரணிலின் தலையும் மஹிந்தவின் உடம்பும் இருந்தால் நாட்டில் மாற்றங்கள் ஏற்படுமாம்

### தற்போதைய அரசின் தீவிர விசுவாசியாக திகழ்ந்த முருத்தெட்டுவே தேரர் கூறுகிறார்



ரணில் விக்கிரமசிங்கவின் மூளையையும், மஹிந்த ராஜபக்ஷவின் உடலையும் ஒன்றாக இணைத்தால் நாட்டுக்கு பாரிய சேவை செய்ய முடியும் என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அந்தவகையில் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டிய தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அவரின் வருகையை முன்னிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். விமர்சனங்கள் இருந்தாலும் ரணிலும் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார். அதனை மறக்கக்கூடாது.

2

## ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் ஜனாதிபதி

### விடுதலையான ஜெயச்சந்திரன் கோரிக்கை

(இ.கலையமுதன்)



எமது விடுதலைக்காகச் செயற்பட்ட அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய

2

## மரணதண்டனைக் கைதியான ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்தில், கொழும்பு மேல் நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனைத் தீர்ப்பளித்தது.

அரசியல்பழிவாங்கல்கள்தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுவிக்கப் பரிந்துரைத்திருந்தது.

இன்று பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 93 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளநிலையில், துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 24 மணிநேரத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதுவரை தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றத்தில் 42 ஆயிரத்து789பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பகுதிகளில், நேற்று 3 ஆயிரத்து 935 வாகனங்களில் வந்த 6 ஆயிரம் பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தமிழ் அரசியல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில், நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 16 பேர் உள்ளடங்குகின்றனர்.

விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் 15 பேர் அநுராதபுரம் சிறையில் இருந்தும், ஒருவர் யாழ்ப்பாணம் சிறையில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலை செய்யப்பட்ட மற்றைய 77 பேரும் சிறிய குற்றங்கள் தொடர்பில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்கள் - என்றார்.

## ஏனைய அரசியல்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து இன்று விடுதலையான தமிழ் அரசியல் கைதி சூரியகாந்தி ஜெயச்சந்திரன் கோரிக்கை விடுத்தார்.

## நீதி இல்லாத நாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கில் குற்றவாளியாக நீரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மனைவி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐவரும் வழங்கியதீர்ப்பைநடைமுறைப்படுத்தாத நாடு. ஒரு நாடு பல சட்டங்கள் உள்ளன என்பது இந்த விடுதலை மூலம் உறுதியாகியுள்ளது எனவும் அவர் சமூக வலைத்தளத்தில் விமர்சித்துள்ளார்.

## ரணிலின் தலையும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், ரணில் விக்கிரமசிங்க அபயராம விகாரைக்குச் சென்று முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் ஆசி பெற்றார். இதன்போதே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறந்த மூளை உள்ளது, மஹிந்த ராஜபக்ஷ மக்களால் விரும்பப்படும் தலைவர். இவர்கள் இருவரும் இணைந்தால் நாட்டுக்கு நல்லது என மக்கள் கருதுகின்றனர் என்பதையே மேற்படி கூற்றின் ஊடாக தேரர் கூற விளைகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முற்றாக முடக்கம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் பிரிவில் மஞ்சந்தொடுவாய் வடக்கு, மஞ்சந்தொடுவாய் தெற்கு ஜின்னா வீதி கிராம சேவகர் பிரிவுகளும், மண்முனை பொலிஸ் பிரிவில் மாமாங்கம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பொலிஸ் பிரிவில் இழுப்புகெதர கிராம சேவகர் பிரிவில் வில்கொட கிராமும், கனுக்கெட்டிய கிராம சேவகர் பிரிவில் கனுக்கெட்டிய கிராமமும் மறு அறிவித்தல் வரை இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

## விடுவிக்கப்பட்ட கைதிகளின் பெயர் விவரம்

| இல | தொடர் இல | பெயர் | கைது திகதி | தீர்ப்பு | தண்டனைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | V 713 | மயில்வாகனம் மதியழகன் | 30.05.2007 | 14.11.2017 | 6 years |
| 2 | V 756 | சிமியோன் சந்தியோகு | 20.07.2011 | 06.12.2017 | 7 years |
| 3 | V 757 | ராகவன் சுரேன் | 24.04.2009 | 06.12.2017 | 7 years |
| 4 | V 758 | சிறி ராகமணி | 11.12.2012 | 06.12.2017 | 7 Years |
| 5 | V 760 | எம்.எம்.அப்துல் சலீம் | 13.12.2011 | 06.12.2017 | 7 years |
| 6 | V 761 | சந்தானம் ஸ்டாலின் ரமேஷ் | 23.01.2012 | 06.12.2017 | 7 years |
| 7 | V 762 | நடராசா சரவணபவான் | 26.08.2009 | 06.12.2017 | 7 years |
| 8 | X 25 | இராசதுரை ஜெகன் | 17.05.2009 | 10.01.2019 | 5 years |
| 9 | X 26 | நல்லான் சிவலிங்கம் | 05.10.2009 | 10.01.2019 | 5 years |
| 10 | X 42 | புருஷோத்தமன் அரவிந்தன் | 21.07.2009 | 16.01.2019 | 5 years |
| 11 | X 43 | இராசவல்லவன் தபோரூபன் | 28.06.2009 | 16.01.2019 | 5 years |
| 12 | X 63 | சூரியகாந்தி ஜெயச்சந்திரன் | 25.09.2010 | 22.01.2019 | 5 years |
| 13 | X 64 | சிவப்பிரகாசம் சிவசீலன் | 26.08.2009 | 22.11.2019 | 5 years |
| 14 | X 20627 | எட்வேட் ஜூலின் | 31.04.2016 | 20.09.2014 | 3 years |
| 15 | U 440 | விஸ்வநாதன் ரமேஷ்குமார் | 09.08.2008 | 10.08.2016 | 17 years |
| 16 | Q 839 | சூரியமூர்த்தி ஜிபோயன் | 18.05.2009 | 19.10..2016 | 14 years |







நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அந்தரத்தில் மாணவர் கல்வி

ஏனைய உலக நாடுகளைப் போல கொவிட் பெருந்தொற்று நெருக்கடியால் பின்னடைவுகளைச் சந்தித்து வரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது.

பொருளாதாரத்தில் தொடங்கி நாட்டின் ஏனைய அனைத்துத் துறைகளும் படுத்து விட்டன.

கொரோனாப் பெருந்தொற்றுப் பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொண்டு, அந்தச் சிக்கல் முடிவுக்கு வந்தாலும் கூட, அது ஏற்படுத்தி விட்டுப் போகும் பெரும் பின்னடைவுகளில் இருந்து நாடும் மக்களும் மீளுவதற்கு இன்னும் பல தசாப்தங்கள் சென்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படியான தாக்கங்களை – இழப்புகளை – மீள முடியாத பின்னடைவுகளை – அது ஏற்படுத்தி வருவது கண்கூடு.

பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்படுத்திய பின்னடைவுகள் பல தொடர் பாதிப்புக்களை நமக்குத் தரவல்லன.

அவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் துறைகளில் பிரதானமானது கல்வித் துறை.

கொரோனாத் தொற்றுத் தொடங்கிய காலத்தில் இருந்து கடந்த ஒன்றரை வருடமாக மாணவர் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வி முற்றிலும் ஸ்தம்பித்துப் போயிருப்பதாகவே தென்படுகின்றது. அதுவும் குறிப்பாகக் கிராமப்புற மாணவர்களின் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ளது.

நாட்டில் மூன்று தசாப்தகாலம் இனமுறுகலால் ஏற்பட்ட யுத்தம் தொடர்ந்த போதும் கூட, கல்வித் துறை பெரிய பின்னடைவை எதிர்நோக்கவில்லை. ஆனால் நிலைமை இப்போது அப்படியல்ல.

இணையவழிக் கல்வி, தொலைக் கல்வி என்றெல்லாம் கல்வி அமைச்சும், அரசும் பீற்றினாலும் கூட, அவை எவையும் மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.

இணையம் மூலமான கல்வியை நாட்டில் ஆகப் பன்னிரண்டு வீதமான மாணவர்களே பெறவில்லை என்று கதை விடுகின்றார் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

ஆனால் இலங்கை ஆசிரியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் இந்தப் புள்ளிவிவரக் கணக்கை அடியோடு மறுத்துரைத்திருக்கின்றார். நாட்டில் அறுபது வீதமான மாணவர்களுக்கு அந்தக் கல்வி முறை – இணைய வழிக் கல்வி – எட்டவேயில்லை என அடித்துக் கூறுகின்றார் அவர்.

பல்வேறு காரணங்கள் மற்றும் இடைஞ்சல்களால் இணைய வழிக் கல்வியைப் பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் நலனை நேரடியாகக் கவனித்துக் கையாள்வதற்காக மாகாணக் கல்வி மையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன என்ற புதிய தகவலை கல்வி அமைச்சர் இப்போது வெளியிடுகின்றார்.

அண்மையில் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராகவும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும், டிஜிட்டல் தொழில்நுட்பத்துறை தமக்குக் கீழ் வருகின்ற காரணத்தின் அடிப்படையில் ஒரு கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் இணைய வழிக் கல்வியைக் கற்பதற்கான தனித்துவமான விசேட செயலி ஒன்று அல்லது திட்டம் ஒன்று மிக விரைவில் உருவாக்கப்பட்டு பாவனைக்கு விடப்படும் என்று அவர் கூறுகின்றார்.

கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறும் மாகாணக் கல்வி மையங்கள், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிடும் புதிய செயலி பற்றிய திட்டம் எல்லாம் இனித்தான் முன்னெடுக்கப்படப் போகின்றன.

கொரோனா வைரஸ் அரக்கன் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கி சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர், இப்போதும் புதிய திட்டம் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்பது பெரும் பின்னடைவே. மிகுந்த நேரத்துடன் நாம் கையாண்டிருக்க வேண்டிய விடயங்கள் இவை.

எந்தத் திட்டத்தை – எந்த யோசனையை – நாம் கையாண்டாலும், அது கிராமப்புற – வறிய – மாணவர்களின் கல்விக்கு இடையூறின்றி கிடைக்கக் கூடியதா என்பதைக் கவனிப்பது முக்கியமாகும்.

கிராமப்புற பெற்றோரும் வாங்கக் கூடிய – பயன்படுத்தக் கூடிய – தரமான 'ஸ்மாட் போன்'களை அவர்களுக்குக் கிட்டச் செய்ய வேண்டும். அதுவும் ஒரே பெற்றோருக்குப் பள்ளிக் கல்வியைத் தொடரும் இரண்டு, மூன்று பிள்ளைகள் வீட்டில் இருந்தால் இந்த போன்களின் எண்ணிக்கையும் இரண்டு, மூன்றாகத் தேவைப்படும். ஒரே நேரத்தில் மூன்று பிள்ளைகளுக்கும் வகுப்புகள் நடக்குமாயின் அதனை எதிர்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பவர்கள் பெற்றோர்கள்.

மேலும் இந்தத் தொலைபேசிகளுக்கான இணைய இணைப்பு மற்றும் டேட்டாவை பெற்றுக் கொள்வதில் குடும்பத்தின் பொருளாதாரம் தாக்குப் பிடிக்குமா என்ற கேள்வியும் உள்ளது.

இந்த விவகாரங்களை இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் இனியாகிலும் கல்வி அமைச்சுக் கொண்டு வரக் கூடிய திட்டம் வெற்றி பெறும். உரியவர்களுக்கு இக்கோரிக்கை சமர்ப்பணம்.

# அஸ்ட்ராஜெனெகா பெற்றவர்களுக்கு 2 ஆவது டோஸ் ஆக பைஸர் ஊசி



அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனை ஔடதங்கள் தயாரிப்பு விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அஸ்ட்ராஜெனெகா, கொவிஷீல்ட் மற்றும் பைஸர் தடுப்பூசிகளை கலவையாக வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் மேலும் 78 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படும் என்றும் அவை அடுத்த மூன்று வாரத்துக்குள் இலங்கையை வந்தடையும் என்றும் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் மற்றும் பைஸர் அல்லது மடர்னா தடுப் பூசிகளின் கலவை பயனுள்ளதாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்களால் தரவு வெளியிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு பைஸர் தடுப்பூசியை வழங்குவதற்கான பரிந்துரைகள் தொடர்பாக அடுத்த இரண்டு வாரங்களில் நிபுணர்களின் குழுவின் அறிக்கை கிடைக்கும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெல்டா மாறுபாட்டுக்கு எதிரான செயல்திறன்: பயன்படுத்தப்படும் தடுப்பூசிகள் குறித்து ஆய்வு

## தொற்றுநோயியல் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாடு ஏனைய பிறழ்வுகளைவிட மிகவும் கடுமையானது என சிரேஷ்ட தொற்றுநோயியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், டெல்டா உள்ளிட்ட கொரோனா வைரஸின் வெவ்வேறு வகைகளுக்கு எதிராக ஒவ்வொரு தடுப்பூசியினதும் செயல்திறனின் அளவைக் கண்டறிய ஆராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

சினோபோர்ம், பைஸர், ஸ்பூட்னிக் வி மற்றும் அஸ்ட்ராஜெனெகா ஆகியவற்றின் அவசர பயன்பாட்டுக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து, அனைத்துக் கொரோனாத்தடுப்பூசிகளும்தற்போது இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை டெல்டா மாறுபாட்டுக்கு எதிரான செயல்திறனைக் கொண்டுள்ளன என பொதுவாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

எனினும் வெவ்வேறு மாறுபாடுகளுக்கு எதிராக ஒவ்வொரு தடுப்பூசியினதும் செயல்திறனின் அளவைக் கண்டறிய ஆராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன என உயர் தொற்றுநோயியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வவுனியா நகரசபைத் தலைவரின் கைது; மன்னார் நகரசபையில் கண்டன தீர்மானம்

வவுனியா, ஜூன் 24

வவுனியா நகரசபைத் தலைவர் கைதுக்கு எதிராக மன்னார் நகரசபையில் நேற்று (புதன்கிழமை) கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபையின் 40 ஆவது அமர்வு நேற்று நகரபிதா அன்ரனி டேவிற்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த 15.06.2021 வவுனியா நகரசபை தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து மன்னார் நகரசபை உறுப்பினரான சம்பூர்ணம் இரட்ணசிங்கத்தால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கண்டனத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது நகர சபை உறுப்பினர் சம்பூர்ணம் இரட்ணசிங்கம் பிரேரனையை முன்வைத்து கருத்து வெளியிடும் போது –

'வவுனியா நகரசபைத் தலைவரின் கைது நடவடிக்கை என்பது மக்கள் ஆணையை பெற்றவர்களின் அதிகாரத்தைப் பறிக்கின்ற செயற்பாடு என்பதோடு நகரசபை தலைவரின் வினைத்திறனான செயற்பாட்டை பொறுத்துக் கொள்ள முடியாத சில அரசியல்



சக்திகள் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரின் துணையுடன் இவ்வாறு கைது செய்துள்ளார்கள்.

இவ்வாறான கைது நடவடிக்கையை முன்னுதாரணமாகக் கொண்டு ஆளும் அரசு தங்களுக்கு எதிரான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளை முடக்க மேற்கொள்ளும் செயற்பாட்டை நாம் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும்.

மக்கள் ஆணை பெற்ற மக்கள் பிரதிநிதியின் அதிகாரத்தையும் அரச ஊழியர்களின் கடமையையும் செய்யவிடாது தடுத்தமை ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்தும் விடயமாக உள்ளது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தீப்பரவலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 4.8 கோடி ரூபா நிதியுதவி

கொழும்பு, ஜூன் 24

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 4.8 கோடி ரூபா நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவி தொகையின் ஊடாக 15 ஆயிரம் பேர் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த கப்பலால் தீ ஏற்பட்டதையடுத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, பாணந்துறை மற்றும் மாத்தறை பகுதி மீனவர்கள் இந்த உதவியின் கீழ் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செய்தி இணையத் தளங்கள் முடக்கி ஈரானின் மீது அமெரிக்கா அதிரடி



ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஷிலின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா,பிரான்ஸ், ரஷியா, இங்கி லாந்து, அமெரிக்கா ஆகியவற்றுடனும், ஜெர்மனியுடனும் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை 2015ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஈரான் ஏற்படுத்தியது.

ஆனால் வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் என்று வர்ணிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம், அமெரிக்க நலன்களுக்கு எதிரானது என்று அந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் குற்றம் சாட்டினார். அத்துடன் அந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாகவும் அவர் 2018 மே மாதம் 8 ஆம் திகதி அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதனால் ஈரான் பொருளாதாரத்தில் பலத்த அடி விழுந்தது. இதில் இருந்து அவ்விரு நாடுகளுக்கும் இடையே தீராப்பகை மூண்டுள்ளது. அமெரிக்காவில் ஜோ பைடன் ஜனாதிபதியாக பதவி ஏற்றும் இந்தப் பகையில் மாற்றம் இல்லை.

இந்தநிலையில் ஈரான் நாட்டின் செய்தி இணையத்தளங்களை அமெரிக்கா அதிரடியாக முடக்கி உள்ளது. தவறான தகவல்களைப் பரப்புவதாக குற்றம் சாட்டி இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துள்ளது.

இதனால் அந்த இணையத்தளங்களை அமெரிக்காவில் யாரும் பார்க்க முடியவில்லை. அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்த இணைய தளங்களில் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதில் அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பு எப்.பி.ஐ. மற்றும் வர்த்தக துறையின் முத்திரைகளும் பதிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஈரான் அரசுக்குச் சொந்தமான பிரஸ் டி.வி., மற்றும் ஏமனின் ஈரான் கூட்டாளியான ஹவுதி இயக்கத்தினரின் அல் மசிரா டி.வியும் தடை செய்யப்பட்டுள்ளன. ஈரான் அணுசக்தி தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீண்டும் தொடங்குவதுதொடர்பாக அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையேயான பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது சர்வதேச அரசியல் அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன.

இது குறித்து விளக்கி அமெரிக்க அரசின் நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஈரான் இஸ்லாமிய ரேடியோ மற்றும் டெலிவிஷன் யூனியன் நடத்துகிற 33 இணைய தளங்களும், ஈராக்கில் ஈரான் ஆதரவு பெற்ற கட்டைப் ஹிஸ்புல்லா இணையதளங்களும் அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஈரான் இஸ்லாமிய ரேடியோ மற்றும் டெலிவின் யூனியன் பயன்படுத்தும் களங்கள் ஒரு அமெரிக்க நிறுவனத்துக்குச் சொந்தமானவை. இதற்காக அமெரிக்க கருவூலத்துறையின் வெளிநாட்டு சொத்து கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்து ஈரான் இஸ்லாமிய ரேடியோ மற்றும் டெலிவிஷன் யூனியன் உரிமம் பெறவில்லை.

மேலும் கட்டைப் ஹிஸ்புல்லா அமைப்பு, அமெரிக்காவால் தீவிரவாத இயக்கமாக கருதி தடை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பும் உரிமம் பெறவில்லை. எனவே இந்த இணைய தளங்கள் செவ்வாய்க்கிழமை (நேற்றுமுன்தினம்) மதியம் முதல் முடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஈரான் தரப்பில் இருந்து எந்த கருத்தும் உடனடியாக வெளியாகவில்லை.



## மும்பை தாக்குதல் சதிகாரன்

# ஹபீஸ் சயீத் வீட்டின் வெளியே குண்டுவெடிப்பு; 3 பேர் மரணம்

மும்பையில் 2008ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் 10 பேர் புகுந்து குண்டுகளை வெடித்தும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் கொடூரமான தாக்குதல்களை நடத்தினர். இதில் 166 அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்த தாக்குதல்களுக்கு பின்னணியில் இருந்தவர் ஹபீஸ் சயீத். இவர், லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தின் இணை நிறுவனர் மற்றும் ஜமாத் உத்த தவா அமைப்பின் நிறுவனர். இவரது வீடு, பாகிஸ்தானில் லாகூரில் ஜோஹார் டவுன் பகுதியில் உள்ளது.

இவரது வீட்டின் வெளியே நேற்று சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

இதில் சிக்கி 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக அங்கிருந்து மீட்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். ஹபீஸ் சயீத், தற்போது லாகூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விமானப் போக்குவரத்தை நாளை முதல் தொடங்கும் நேபாளம்

நேபாளத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்ததால் உள்நாட்டு விமானங்கள் மே 3 ஆம் திகதி ரத்து செய்யப்பட்டன. சர்வதேச விமானங்கள் அனைத்தும் மே 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் ரத்து செய்யப்பட்டன. காத்மாண்டு-டெல்லி வழித்தடத்தில் 2 வாராந்திர விமானங்கள் மட்டும் இயக்கப்பட்டன.

தற்போது கொரோனாத் தொற்று குறைந்து வரும் நிலையில், நாளை முதல் கொரோனா கட்டுப்பாடுகளுடன் சர்வதேச விமானப் போக்குவரத்தை தொடங்க உள்ளதாக நேபாள அரசு அறிவித்துள்ளது. ஜுலை 1 ஆம் திகதி முதல் உள்நாட்டு விமானங்கள் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாள கலாச்சாரத்துறை, சுற்றுலாத்துறை, விமானப் போக்குவரத்து துறை உயர் அதிகாரிகளுடன் பிரதமர் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு விமானங்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டுமே பயணிகளை அனுமதித்து, விமானங்களை இயக்க வேண்டும், சர்வதேச விமானங்கள் இதற்குமுன்னர் வெளியிடப்பட்ட பாதுகாப்பு நெறிமுறையின்படி இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


காத்மண்டுவில் இருந்து குறிப்பிட்ட நகரங்களுக்கு மட்டும் வழக்கமான சர்வதேச விமானங்களை இயக்க அரசு முடிவு செய்துள்ளது. புதிய முடிவுகளின்படி, நேபாள ஏர்லைன்ஸ், கத்தார் ஏர்வேஸ் ஆகிய நிறுவனங்கள் காத்மாண்டு-தோகா வழித்தடத்தில் வாரத்தில் இரண்டு விமானங்களை இயக்க அனுமதிக்கப்படும்.

காத்மண்டு-டோகா, காத்மண்டு-கோலாலம்பூர், வழித்தடங்களில் வாரத்திற்கு நான்கு விமானங்கள், காத்மாண்டு-இஸ்தான்புல், காத்மாண்டு-தம்மம் மற்றும் காத்மண்டு-குவைத் வழித்தடங்களில் வாரத்திற்கு இரண்டு விமானங்களை அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மற்ற வழித்தடங்களைப் பொறுத்தவரை, காத்மண்டு-மஸ்கட், காத்மண்டு-சியோல், காத்மண்டு-ஜப்பான், காத்மண்டு-செங்டு மற்றும் காத்மண்டு-குவாங்சோ ஆகிய வழித்தடங்களில் வாரத்திற்கு ஒரு விமானத்தை இயக்க அனுமதித்துள்ளது.

நேபாளத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 1,511 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 50,560 பேர் சிகிச்சையில் உள்ளனர்.





# விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்ட விண்வெளி வீரர்களுடன் சீனா அதிபர் பேச்சு

விண்வெளி திட்டங்களில் ஆர்வம் காட்டி வருகிற சீனா, தற்போது விண்வெளியில் விண்வெளி நிலையம் ஒன்றை அமைத்து வருகிறது. இந்த விண்வெளி நிலையத்துக்கு நீ ஹைசெங், லியு போமிங், டாங் ஹோங்போ என்னும் 3 வீரர்களையும் கடந்த 17 ஆந் திகதி அனுப்பி வைத்துள்ளது. இது ஒரு சாதனையாக சீனாவால் பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் சீன விண்வெளி நிலையத்தை கட்டமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அந்த 3 வீரர்களுடனும் அதிபர் ஜின் பிங் நேற்று பீஜிங்கில் உள்ள விண்வெளி கட்டுப்பாட்டு மையத்தில் இருந்தபடியே முதல் முறையாக நேரடியாக தொடர்பு கொண்டு பேசினார். அவர்களது விண்வெளி ஆய்வுப்பணிக்காக ஜின்பிங் நன்றி தெரிவித்தார்.

அப்போது அவர், நீங்கள் 3 மாதங்கள் விண்வெளியில் செலவிடுவீர்கள். விண்வெளியில் இருக்கும்போது நீங்கள் செய்யும் வேலையும், உங்கள் வாழ்க்கையும் சீன மக்களின் இதயங்களில் இருக்கும் என நெகிழ்ச்சியுடன் கூறினார்.

தொடர்ந்து அவர் விண்வெளி வீரர்களுடன் பேசும்போது, நமது சொந்த விண்வெளி நிலையத்தை நிறுவுவது ஒரு முக்கியமான மைல் கல் ஆகும். இது விண்வெளியை மனித குலத்தின் அமைதியான பயன்பாட்டுக்கு கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

3 வீரர்களும் தங்களுக்கு அளித்து வருகிற ஆதரவுக்காக ஜின் பிங்குக்கு மனமார நன்றி தெரிவித்தனர். 5 நிமிடம் நடந்த இந்த உரையாடல் சீன அரசு டெலிவிஷன் சனல்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இந்த 3 விண்வெளி வீரர்களும் அடுத்த 3 மாதங்களில் 'தியாங்காங் ஹெவன்லி பேலஸ்' என்று அழைக்கப்படுகிற இந்த விண்வெளி நிலையத்தை கட்டி முடிப்பார்கள். இது சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு போட்டியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழ அகதிகள் முகாமில் கள ஆய்வு செய்தார் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி



தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டி அருகேயுள்ள எட்டயபுரம் தாப்பாத்தில் அமைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள் முகாமில் அதன் நிலைமைகள் குறித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி நேற்று ஆய்வு மேற் கொண்டார். அத்தோடு, தனது சொந்த நிதியிலிருந்து முகாமிலுள்ள 382 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கினார்.

அங்கு, 12 லட்ச ரூபா மதிப்பில் நடைபெறும் நிவாரணக் கடையின் கட்டுமானப் பணிகளையும் அவர் பார்வையிட்டார். தொடர்ந்து அங்குள்ள மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ் உடனிருந்தார். அப்போது, தங்களுக்கு 'குடியுரிமை வழங்க வேண்டும். தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். மருத்துவம், வேளாண்மைப் படிப்புகளில் ஒதுக்கீடு வழங்க வேண்டும்' என முகாமிலுள்ளோர் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவை தொடர்பில் இயன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என கனிமொழி அவர்களுக்கு உறுதியளித்தார்.



# எதிர்ப்புப் போராட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும்!

## சட்டசபையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தமிழக சட்டசபையில் இன்று உரையாற்றிய முதலமைச்சர் மு.க ஸ்டாலின், சபையின் ஆரம்ப நாளிலிருந்து எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பொதுவான பதில்களை வழங்கினார். அவரது உரையில்–

பொறுத்தார் பூமியாழ்வார் என்பது பழமொழி, நாங்கள் பத்தாண்டுகள் பொறுத்திருந்து ஆட்சிக்கு வந்துள்ளோம், கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம், துளி அளவும் சந்தேகம் வேண்டாம்.

இரு தினங்களாக தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் 22 பேர் விவாதத்தில் பங்கேற்றிருக்கிறார்கள், அவர்களின் கருத்தை நான் அறிவுரையாக எடுத்துக் கொள்கிறேன். 5 ஆண்டு கால ஆட்சியில் செயல்படுத்தவுள்ளதை ஆளுநர் உரையில் கூறிவிட முடியாது; ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம் தான்

தடுப்பூசி இல்லை, ஒக்சிஜன் இல்லை என்ற சூழலில்தான் ஆட்சிக்கு வந்தோம். தற்போது இல்லை என்ற சூழலே இல்லாத நிலையை உருவாக்கியுள்ளோம்.

ஸ்டெர்லைட் போராட்டத்தின்போது மக்களுக்காகக் குரல் கொடுத்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டுள்ளன. போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது.

மீத்தேன், நியூட்ரினோ எட்டுவழிச் சாலை எதிர்ப்புப் போராட்டங்களின்போது தமிழக அரசின் சார்பில் போட்டப்பட்ட வழக்குகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

# காவல்துறை மோப்ப நாய்களுக்கு கேரளாவில் நினைவிடம் அமைப்பு



கேரளாவில் காவல்துறைப் படையில் பணியாற்றி இறந்த மோப்ப நாய்களுக்கு மரியாதை செலுத்தம் விதமாக, கேரள அரசினால் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் கொலை, கொள்ளை உள்ளிட்ட முக்கிய வழக்குகளில் குற்றவாளிகளை அடையாளம் காண மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களின் உயிரைக் காக்கும் பணியில் சில நேரங்களில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு இந்த நாய்கள் இறப்பதுண்டு. கேரள காவல் துறை டி.ஜி.பியாக லோக்நாத் பெகரா பதவியேற்ற பின்னர் இந்த நாய்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் பல்வேறு வசதிகளைச் செய்துள்ளார்.

பணிக் காலத்திலோ அல்லது அதன் பிறகு இறந்தாலோ, அவற்றை மரியாதையுடன் அடக்கம் செய்வதற்காக திருச்சூரில் உள்ள கேரள காவல் துறை அகடமி வளாகத்தில் மோப்ப நாய்களுக்கான நினைவிடமும், கல்லறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவைகளுக்கென நினைவிடமும் கல்லறையும் அமைக்கப்படுவது ஆசியாவிலேயே இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே வயதாகி ஓய்வு பெறும் மோப்ப நாய்களும் அநாதைகளாகக் கைவிடப்படாது சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கேரள காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற 19 நாய்கள் இவ்வாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்காக தனியறைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அந்த அறைகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த நாய்கள் குளிப்பதற்காக நீச்சல் குளமும் அங்கேயுள்ளது. அவற்றுக்கு ஏற்ற சிறப்பு உணவுகள் வழங்கப்படுகின்றன. அவற்றின் உடல்நிலையைக் கண்காணிக்க 2 மருத்து–வர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# புதுச்சேரிக்கு தயாரானது அமைச்சரவைப் பட்டியல்

கடந்த மே 7 ஆம் திகதி புதுச்சேரியின் முதலமைச்சராக என்.ரங்கசாமி பதவியேற்ற நிலையில், அமைச்சரவைப் பங்கீட்டில், பா.ஜ.கவுக்கும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கும் இடையே ஏற்பட்டு வந்த இழுபறி காரணமாக இதுவரை அமைச்சரவை பதவியேற்கவில்லை.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனை நேற்றுக் காலை சந்தித்த முதலமைச்சர் ரங்கசாமி, அமைச்சரவைப் பட்டியலை அவரிடம் அளித்தார். இதனால் கடந்த 52 நாள்களுக்கு மேல் நீடித்து வந்த இழுபறி முடிவுக்கு வந்தது. பா.ஜ.க.வுக்கு 2 அமைச்சுகளும், என்.ஆர். காங்கிரஸுக்கு 3 அமைச்சுகளும் என தயாரிக்கப்பட்ட பட்டியலை அவர் ஆளுநரிடம் வழங்கியுள்ளார்.

முதல்வர் ரங்கசாமி வழங்கிய அமைச்சர்கள் பட்டியலில் 5 அமைச்சர்களில் பா.ஜ.க. சார்பில் முன்னாள் அமைச்சர் நமச்சிவாயம், ஊசுடு எம்.எல்.ஏ. சாய் சரவணன் பெயர்கள் இடம்பெற்றுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன. மீதமுள்ள அமைச்சுக்களில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லெட்சுமிநாராயணன், தேனீஜெயக்குமார், லெட்சுமிகாந்தன், திருமுருகன், ராஜவேலு, சந்திரபிரியங்கா ஆகியோரில் மூவருக்கு வாய்ப்பு உள்ளதாகத் தெரிகின்றது.

# நீட் தேர்வு நடைபெறுமா என்பதைத் தெளிவுபடுத்துக

## முன்னாள் முதல்வர் பழனிசாமி கோரிக்கை



தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, நீட் தேர்வு நடைபெறுமா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் மாணவர்கள் குழப்பத்தில் உள்ளார்கள் என்றும் கோரினார்.

அதற்குப் பதிலளித்த தமிழக முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடியை நேரில் சந்தித்தபோது நீட் தேர்வு வேண்டாம் என நான்கைந்து முறை வலியுறுத்தினேன்.

2010 இல், விரும்புகின்ற மாநிலங்கள் மட்டும் நீட் தேர்வில் பங்கேற்கலாம் என்ற நிலைமை இருந்தது. தற்போது அனைத்து மாநிலங்களுக்கும் நீட் கட்டாயம் என்ற நிலை உருவாகியுள்ளது.

நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற போராடுவோம்; வெற்றி பெறுவோம். அ.தி.மு.கவும் துணை நிற்க வேண்டும். நீட் தேர்வை ரத்துச் செய்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. நீதிபதி ராஜன் தலைமையிலான குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் சட்ட ரீதியான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்தார். இதனையடுத்து எடப்பாடி பழனிசாமி, நீட் தேர்வு விவகாரத்தில் அ.தி.மு.க. நிச்சயம் துணை நிற்கும்! என்று உறுதியளித்தார்.

இதனிடையே, காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருக்கும்போதுதான் நீட் வந்தது என்பது உண்மைதான். ஆனால், அது தமிழகத்திற்கு அது வரவில்லை. ஜெயலலிதா இருக்கும் வரை நீட் தேர்வு நடைபெறவில்லை. எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு வந்த பிறகுதான் நீட் தமிழகத்திற்கு வந்தது என்று மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் கூறினார்.

# சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் ஊர்வலத்துடன் அடக்கம் செய்யப்பட்டது





இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டிற்கு முன்பாக அவரின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம் நேற்று புதன்கிழமை மாலை பெருமளவான மக்களின் பங்களிப்புடன் ஊறணி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

“அமல் எங்கள் நண்பனை மீட்டுத்தர முடியுமா?”, “கரங்கொடுத்து தூக்கிவிட்டவர்களை காலடியில் நசுக்கும் விசமிகளின் பசிக்கு இரையாகிய அப்பாவி இளைஞனின் மரணத்திற்கு நீதிவேண்டும்” என்ற கோரிக்கை தாங்கிய பதாகைகளை சடலம் தாங்கிய பேழை ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு, ஊறணி, மன்றேசா வீதியில் உள்ள இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரால் சின்ன ஊறணியைச் சேர்ந்த மகாலிங்கம் பாலசுந்தரம் என்னும் இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தாங்கள் மன்ரேசா வீதியில் உள்ள வீடு ஒன்றில் காசு வாங்கிவிட்டு ஓட்டோவில் செல்லும்போது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக மரத்தின் கீழ் இருந்த மெய்ப்பாதுகாவலர் குறித்த நபரை அழைத்தார் எனவும் இதன்போது தாங்கள் ஓட்டோவைத் திரும்பிவந்து குறித்த மெய்ப்பாதுகாவலரிடம் ஏன் அழைத்தீர்கள் என்று கோரிய போது இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்ற நிலையில் திடீர் என மெய்ப்பாதுகாவலர் இடுப்பிலிருந்து துப்பாக்கியை எடுத்து குறித்த நபரின் தலை மீது சுட்டார் எனவும் சம்பவத்தின்போது உயிரிழந்த நபருடன் வந்தவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் புதன் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒரு மணி நேரம் உயிரிழந்த நபரின் இல்லத்தில் சடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

குறித்த நபரின் உடலத்திற்கு அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து ஊர்வலமாக பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பெருமளவானோர் புடைசூழ சின்ன ஊறணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதன்போது சடலம் வைக்கப்பட்டிருந்த பகுதியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

## இளைஞன் தற்கொலை முயற்சி வைத்தியசாலையில் அனுமதி

மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் மேல் இருந்து தற்கொலை செய்துக்கொள்ள வாவியில் குதித்த இளைஞன் ஒருவரை வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் காப்பாற்றி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணி அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞனே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தான் கொண்டுவந்த பை மற்றும் செருப்பு என்பவற்றை பாலத்தின் மீது கழற்றி வைத்துவிட்டு பாலத்தின் மேல் இருந்து பகல் 3 மணி அளவில் குறித்த இளைஞன் வாவியில் பாய்ந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அப்போது அந்த பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் உடனடியாக வாவியில் குதித்து இளைஞனை காப்பாறி கரை சேர்த்ததை அடுத்து அவரை உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதித்தனர். சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு நகரில் நேற்று சூறாவளி

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை 7.30 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக மரங்கள் முறிந்து சேதமடைந்துள்ளன .

மரங்கள் முறிந்து விழுந்ததில் சில வீதிகளின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது

குறித்த மரங்களை வீதிகளில் இருந்து அகற்றும் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்கள் மற்றும் மின்சாரசபை ஊழியர்கள், மாநகரசபை அனர்த்த முகாமைத்துவக் குழு ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இதன்படி மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபை ஆணையாளர் தயாபரன் ஆகியோரின் தலைமையில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காற்றினால் முறிந்த மரங்களை அகற்றி மக்களின் போக்குவரத்து சிரமத்தை சீர் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் கொலை;
## வியாழேந்திரனின் கருத்தால் மட்டக்களப்பில் மக்கள் அதிர்ச்சி

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் மெய்பாதுகாவலரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஊடகவியலாளர் மாநாட் டில் தெரிவித்த கருத்து முற்போக்கு தமிழர் அமைப்பில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதென்பது ஒரு தனிப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் பிறிதொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் என்றும் தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருக்கின்றார்.

தனது அரசியல் இலாபத்திற்காக இளைஞர்களை உசுப்பேத்தி அவர்களை முற்போக்குத் தமிழர்கள் என்றும் அங்கத்துவம் பெற்றுள்ளதாகவும் தனது முகநூலில் பெயரை பதிவிடும் வியாழேந்திரன் தனது அரசியலுக்கு ஒரு பிரச்சினை வந்து விட்டது என்றவுடன் அவர்களை கழட்டி விடுவது போன்ற கருத்தை தெரிவிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் செங்கலடியில் உள்ள திரையரங்கில் மதுபோதையில் இடம்பெற்ற கலவரத்தில் கடைகளின் கண்ணாடிகளை உடைத்தவர்கள் பொலிஸாரால் கைது செய்யபட்டனர். இதன் போதும் முற் போக்கு தமிழர்கள் எனப்படும் வியா ழேந்திரனின் கட்சி சார்ந்தவர்களே கைது செய்யப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 மாதத்துக்கு முன்னதாகவும் மதுபோதையில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் செயலாளர் என அழைக்கப்படும் ஒருவர் வாகனத்தை வேகமாக ஓட்டி விபத்துக்குள்ளாகி தப்பி ஓடிய பின் பொலிஸாரால் கைது செய்த சம்பவமும் பதிவாகியிருந்தது.

தொடர்ச்சியாக இராஜாங்க அமைச்சரின் ஆதரவாளர்கள் அவருடைய அரசியல் கட்சி சார்ந்தவர்கள் இவ்வாறான சம்பவங்கள் மேற்கொண்ட போதும் பொலிஸார் சரியான சட்ட நடவடிக்கை எடுக்காததன் பிரதிபலனே இன்று இந்த கொலைக்கான ஒரு தூண்டுகோலாக அமைந்துள்ளதாக பலராலும் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

## அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் நாமலின் கருத்தை வரவேற்கிறோம்
### கோவிந்தன் கருணாகரம் பாராட்டு



அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் அமைச்சர் நாமலின் கருத்து காலம் கடந்த ஞானம் என்றாலும் நாங்கள் அவரின் கருத்தை வரவேற்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் நாடாளுமன்ற அமர்வில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

நேற்றைய சபை அமர்விலே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்வது, நீண்டகாலம் சிறையில் வாடிக் கொண்டிருக்கும் எமது உறவுகளான அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான அறிக்கையினைவெளியிட்டிருந்தார். இது மிகவும் சந்தோசமான விடயம்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.

இந்த விடயத்தை நீங்கள் எப்போதோ செய்திருக்கவேண்டும். 2009 களிலே பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை புனர்வாழ்வளித்தோம் எனவும் அவர்களில் சுமார் மூவாயிரத்து ஐநூறு பேருக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுத்தோம் எனவும் கூறும் நீங்கள் ஒரு சில நூற்றுக் கணக்கான போராளிகளை முப்பது நாற்பது ஆண்டுகளாக சிறையில் வைத்திருந்ததைப் பற்றி ஏற்கனவே சிந்தித்திருக்க வேண்டும்.

இன்று ஜி.எஸ்.பி. வரிச்சலுகை, அமெரிக்க காங்கிரஸ் கட்சியின் அறிக்கை என்பன போன்ற சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக இவற்றை நீங்கள் கையில் எடுக்கின்றீர்கள். இருந்தாலும் காலம் கடந்த ஞானம் என்பது போல நாங்கள் அதனை வரவேற்கின்றோம்.

நீண்ட காலமாகச் சிறையில் இருந்தவர்கள் மாத்திரமல்லாமல் கடந்த காலங்களிலே முகநூல்கள் போன்ற சமூக வலைதளங்கள் ஊடாக தகவல்களைப் பதிவு செய்தார்கள் என்பதற்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீங்கள் மீள்பரிசீலனை செய்யாமல் அதனை முழுமையாக இல்லாமல் செய்தால் தான் இந்த நாடு சுபீட்சம் அடையும் என தெரிவித்துள்ளார்.




## முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில்

# இந்தியாவை வீழ்த்தி நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது!

சர்வதேச கிரிக்கெட் சபையினால் முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் நடத்தப்பட்டது. பல்வேறு போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நியூசிலாந்து, இந்திய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. சவுத்தாம்டன் மைதானத்தில் கடந்த 18 ஆம் திகதி தொடங்கிய இறுதிப்போட்டியில் முதல் நாளன்றே மழை காரணமாக ஆட்டம் நடைபெறவில்லை. நான்காவது நாள் ஆட்டமும் மழை காரணமாக ஒரு ஓவர்கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. ஆயினும், முன்னரே திட்டமிட்டபடி ஆறாவது நாளும் இந்தப் போட்டிக்காக ஒதுக்கப்பட்டிருந்ததால் போட்டியில் முடிவொன்றை எட்ட முடிந்துள்ளது.

தனது முதல் இன்னிங்ஸில் இந்தியா 217 ஓட்டங்களையும், நியூசிலாந்து 249 ஓட்டங்களையும் எடுத்தன. 5 ஆவது நாள் முடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 64 ஓட்டங்களை எடுத்து 32 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. இதையடுத்து வெற்றியாளரை முடிவு செய்யும் வகையில் 6 ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்தியத் துடுப்பாட்டக்காரர்களை நியூசிலாந்துப் பந்துவீச்சாளர்கள் தடுமாற வைத்து அடுத்தடுத்து ஆட்டமிழக்கச் செய்ய 170 ஓட்டங்களுக்கு இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதையடுத்து, மீதமிருந்த 53 ஓவர்களில் 139 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு நியூசிலாந்து அஸி களமிறங்கியது. 44 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுக்களை இழந்ததால் நியூசிலாந்து சற்று நெருக்கடிக்கு உள்ளானது. ஆயினும், வில்லியம்சன், றொஸ் டெய்லர் இருவரதும் நிதானமான, உறுதியான துடுப்பாட்டத்தின் மூலம் மேலும் விக்கெட் எதனையும் இழக்காது அந்த அணி முதல் ஐ.சி.சி. டெஸ்ட் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 45.5 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்டிய நியூசிலாந்து, 8 விக்கெட்டுக்களால் இந்திய அணியை வீழ்த்தியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக, இரு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 7 விக்கெட்டுக்களை வீழ்த்திய நியூசிலாந்தின் கைல் ஜமிசன் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 144 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற முதல் அணி என்ற சாதனையை நியூசிலாந்து பெற்றுள்ளது. கடந்த 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் நியூசிலாந்து அணி தோல்வி அடைந்திருந்த நிலையில், இந்த வெற்றி அந்த அணிக்குப் பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது. இதற்கு முன்பு கடந்த 2000ஆம்ஆண்டில்இந்தியாவைவீழ்த்திசம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியதே நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் ஐ.சி.சி. சர்வதேசக் கிண்ணத் தொடரொன்றின் சிறப்பான பெறுபேறாக இருந்து வந்தது.

இந்த வெற்றியின் மூலம், தான் இறுதியாக விளையாடிய 9 டெஸ்ட் போட்டிகளில் ஒரு தோல்வியைக் கூடச் சந்திக்காத அணி என்ற சிறப்பையும் நியூ சிலாந்து பெற்றுள்ளது. தனது இறுதி 9 டெஸ்ட் போட்டிகளில் 8 வெற்றியையும் ஒரு சமநிலை முடிவையும் நியூ சிலாந்து பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலாவது ரி-20 போட்டியில் இலங்கை அணியை அடித்துத் துவைத்தது இங்கிலாந்து

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப் பெற்றது.

கார்டிப் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. தசுன் சானக 50 ஓட்டங்களையும் குசல் பெரேரா 30 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் அடில் ரஷிட், சாம் கரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

130 என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 17.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் ஜேஸன் ரோய் 36 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் துஸ்மந்த சமீர மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஜோஸ் பட்லர் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்றிரவு கார்டிப் மைதானத்திலேயே நடைபெறவுள்ளது.

இந்த மைதானத்தில் இங்கிலாந்து விளையாடியுள்ள ஏழு ரி-20 போட்டிகளிலும் அந்த அணியே வெற்றிபெற்றுள்ளது. இலங்கை அணியோ, இங்கிலாந்துக்கு எதிராக விளையாடிய இறுதி நான்கு ரி-20 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. இலங்கை அணி 2014 இல் ஓவல் மைதானத்தில் வைத்தே இறுதியாக இங்கிலாந்தை ரி-20 போட்டியொன்றில் தோற் கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத்தொடர் 5–0 என ஸ்லோவாக்கியாவை வீழ்த்தியது ஸ்பெய்ன்




நேற்று நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத்தொடரின் பிரிவு போட்டியில் ஸ்லோவாக்கியா அணியை 5–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதி 16 அணிகள் பங்கேற்கும் நொக்–அவுட் சுற்றுக்கு முன்னேறியது.

இந்தப் பிரிவில் சுவீடன் முதலிடம் பிடிக்க ஸ்பெயின் 5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. அடுத்த திங்களன்று ஸ்பெயின் அணி குரேஷியாவை கொப்பன்ஹேகனில் சந்திக்கிறது.

ஸ்பெயின் அணிக்கு முதல் கோலை ஸ்லோவாக்கியா அணியே அடித்துக் கொடுத்தது. பந்தை வெளியே தட்டிவிடும் முயற்சியில் ஸ்லோவாக்கியா கோல் காப்பாளர் தன் கோல்போஸ்ட்டுக்குள்ளேயே பந்தைத் தட்டிவிட்ட, அது ஸ்பெயினுக்கான முதல் கோலானாது.

பிறகு ஸ்பெய்ன் அடுத்தடுத்து கோல்களை இறக்கியது. இடைவேளையின் மேலதிக நேரத்தில் லப்போர்ட் 2 ஆவது கோலை அடிக்க 56 ஆவது நிமிடத்தில் பப்லோ சராபியாவும், 67 ஆவது நிமிடத்தில் ஃபெரான் டொரஸும் கோல்களை அடித்தனர். 71 ஆவது நிமிடத்தில் மீண்டுமொரு சேம்சைட் கோலை ஸ்லோவாக்கிய அடித்தது. இதனால் 5 – 0 என்ற கோல்கள் கணக்கில் ஸ்பெயின் வெற்றிபெற்று, இறுதி 16 அணிகள் கொண்ட சுற்றுக்குள் நுழைந்தது.

மற்றொரு இதே பிரிவுப் போட்டியில் சுவீடன் அணி போலந்தை 3–2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் முன்னேறியிருக்கிறது.

# உலக சாதனையை சமப்படுத்தினார் ரொனால்டோ

## போர்த்துக்கல்லும் நொக்–அவுட் சுற்றுக்குள்!



புடாபெஸ்ட்டில் நடைபெற்ற யூரோ கிண்ணத் தொடரின் விறுவிறுப்பான போட்டியில் பிரான்ஸ் அணியுடன் மோதிய போர்த்துக்கல் 2–2 என்று சமநிலை முடிவைப் பெற்றது. போர்ச்சுக்கல்லின் 2 கோல்களையும் ரொனால்டோ அடிக்க, அந்த அணி நொக்–அவுட் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

ஆட்டத்தின் 30 மற்றும் 60 ஆவது நிமிடங்களில் பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்த 2 கோல்கள் ஆட்டத்தை சமன் செய்தது. இந்த இரு கோல்களோடு ரொனால்டோ 109 கோல்களை அடித்து, ஈரானின் அலி டே வசமிருக்கும் 109 சர்வதேசப் போட்டிக் கோல்கள் என்ற உலக சாதனையைச் சமன் செய்திருக்கிறார். போர்த்துக்கல் அடுத்த சுற்றில் உலகின் முதல் நிலை அணியான பலமிக்க பெல்ஜியத்தைச் சந்திக்கிறது.

பிரான்ஸ் அணியின் கரீம் பென்செமா 46 ஆவது நிமிடத்தில் பெனால்டி மூலம் ஒரு கோலையும் பிறகு 47 ஆவது நிமிடத்தில் இன்னொரு கோலையும் அடித்தார். இறுதி 16 சுற்றில் பிரான்ஸ் அணி, சுவிட்ஸர்லாந்தைச் சந்திக்கிறது. சர்ச்சை வழக்கொன்றில் சிக்கி 6 வருடங்கள் தேசிய அணியில் இடம்பெறாதிருந்த கரீம் பென்செமா சர்வதேச கால்பந்தாட்டத்துக்கு மீண்டும் வந்து ஒரே போட்டியில் 2 கோல்கள் அடித்த சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தப் போட்டியில் ரொனால்டோ அடித்த முதல் கோல், கடந்த 7 போட்டிகளில் பிரான்ஸுக்கு எதிராக அவரடித்த முதல் கோலாகவும் யூரோ கிண்ணத்தில் அவரது 20 ஆவது சாதனைக் கோலாகவும் அமைந்தது.

# போட்டிகளைப் பார்வையிட வரும் ரசிகர்களுக்குப் பல கட்டுப்பாடுகள்

## 18 பக்கங்கள் கொண்ட கையேட்டை வெளியிட்டது ஒலிம்பிக் குழு

ஒலிம்பிக் போட்டிகளின்போது அரங்குகளுக்குள் வரும் ரசிகர்கள் வீரர்களைத் தொடவோ கட்டித் தழுவவோ முயற்சிக்கக்கூடாது, கையொப்பம் வாங்கக்கூடாது உள்ளிட்ட பல கட்டுப்பாடுகளை டோக்கியோ ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது. கடந்த வருடம் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவிருந்த ஒலிம்பிக்ஸ் தொடர், கொரோனாவால் இந்த வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி ஜூலை 23 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. ஜப்பான் உட்பட பல நாடுகளில் இன்னும் கொரோனாவின் வீச்சு குறையாததால் போட்டிகளை நடத்துவதற்கு ஜப்பானிலேயே கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. ஆனால், போட்டிகளை நடத்துவதில் ஜப்பான் அரசும், சர்வதேச ஒலிம்பிக் சபையும் உறுதியாகவுள்ளன.

பார்வையாளர்களை அனுமதிப்பது தொடர்பாக இறுதி முடிவுகள் எடுப்பதில் இழுபறிகள் இருந்துவந்த நிலையில், ஒவ்வொரு போட்டியையும் நேரில் பார்ப்பதற்கு தலா பத்தாயிரம் உள்நாட்டு ரசிகர்களை அனுமதிக்க உள்ளதாக கடந்த வாரம் டோக்கியோ ஒலிம்பிக் குழு அறிவித்தது. இதனையடுத்து, ரசிகர்களுக்கான கட்டுப்பாடுகளைக் கொண்ட கையேட்டை நேற்று அந்தக் குழு வெளியிட்டுள்ளது. முகக்கவசம் கட்டாயம் அணியவேண்டும். கைகளைக் கழுவும் போது பயன்படுத்துவதற்குத் துவாய் அல்லது கைக்குட்டையை எடுத்து வரவேண்டும். போட்டி தொடங்குவதற்கு முன்பே அரங்கிற்குள் வந்துவிட வேண்டும். நிறையப் பொருள்களுடன் அரங்கிற்குள் வருவதைத் தவிர்க்கவேண்டும். அரங்கில் நுழைவதற்கு முன்பு உடல் வெப்பப் பரிசோதனை உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



தனி மனித இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும். வரிசையில் நிற்கும்போதும், உட்காரும் போதும் மற்றவருடன் 2 மீற்றர் இடைவெளியைப் பேணுவது அவசியம். பொது வாகனங்களில் வரும் போதும் இந்த முன்னெச்சரிக்கையை கடைப்பிடிக்க வேண்டும்.

தனிப் பயன்பாட்டுக்கான கிருமி நீக்கி களையும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

உடல் நலமில்லை என்றால் அரங்கிற்குள் வருவதைத் தவிர்ப்பது நல்லது.

ரசிகர்களுக்காக உருவாக்கப்பட்ட செயலியை ஒவ்வொரு ரசிகரும் பதிவிறக்கம் செய்து தரவுகளைப் பதிவிட்டிருக்க வேண்டும். அரங்கிற்குள் வந்த பின்னர் ஏதாவது உடல் நலக் குறைபாடு தெரியவந்தால், தயங்காமல் அரங்கப் பணியாளரிடம் தெரிவித்து உதவி கோரலாம். போட்டி நடைபெறும் அரங்குகளுக்குள் மது வகைகளைக் கொண்டு வரவோ, அரங்கில் வைத்து அருந்தவோ அனுமதி கிடையாது. அரங்குகளில் மது விற்பனை நடை பெறாது.

குழுவாக உட்கார்ந்து சாப்பிட அனுமதி கிடையாது. வீரர்களைக் கட்டித்தழுவ, கை குலுக்க, அவர்களது கையொப்பங்களை வாங்க அனுமதி கிடையாது. வீரர்களிடம் மட்டுமின்றி, சக ரசிகர்களையும் கட்டிப்பிடிப்பது, அவர்களுடன் கை குலுக்குவது, அருகில் செல்வது என கொரோனா பரம்பலை ஏற்படுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் தவிர்க்க வேண்டும்.

கைதட்டி, விசிலடித்து, சத்தம் எழுப்பி உற்சாகப் படுத்தவோ, கையில் வைத்திருக்கும் கைத்துண்டு அல்லது கைக்குட்டையை அசைத்து ஆர்வத்தை வெளிப்படுத்தவோ தடைகளேதுமில்லை. போன்ற பல்வேறு வரையறைகளைக் கொண்ட 18 பக்கங்களிலான கையேட்டை ரசிகர்களுக்காக டோக்கியோ ஒலிம்பிக் குழு வெளியிட்டுள்ளது. வரையறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# அறிகுறிகள் குறைந்தபின் அக்கறையின்மையே மரணம் வீடுகளில் சம்பவிக்கக் காரணமாகும்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவிப்பு

கொவிட் தொற்றுக்குள்ளானோரில் பெருமளவானோர் வீடுகளிலேயே உயிரிழக்கும் வீதம் அதிகரித்துள்ளமைக்கான காரணம், அறிகுறிகள் குறைவடைந்த பின்னர் வைத்தியசாலைகளுக்கு செல்லாமல் வீடுகளிலேயே தங்கியிருப்பதாகும் என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் - கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் உயிரிழக்கும் வீதம் அதிகரித்துள்ளமைக்கான காரணம், தொற்று அறிகுறிகள் குறைவடைந்த பின்னர் சுகாதாரத் தரப்பினருக்கு அறிவிக்காமல் வீடுகளிலேயே இருப்பதாகும்.

இதேபோன்று தொற்று அறிகுறிகள் தீவிரமடைந்தால் அதன் போது தொற்றாளரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையும் வீடுகளில் உயிரிழப்புக்கள் பதிவாகும் வீதம் அதிகரிக்கக் காரணமாகும்.

கொவிட் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு அவர்களிடம் சொந்த வாகனம் இல்லாத பட்சத்தில் வேறு வாகனங்களில் செல்வதிலும் சிக்கல் காணப்படுகிறது. அத்தோடு 1990 அம்புலன்ஸ் சேவைகளும் தொடர் சேவையில் ஈடுபட்டுள்ளமையால் இதில் தாக்கம் செலுத்துகின்றது. எனவே சாதாரண தொற்று அறிகுறிகள் தென்படும் போதே மக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டும். - என்றார்.

# தனிமைப்படுத்தல் விதிகள் மீறப்படுகின்றனவா சிவில் உடையில் கண்காணிக்கும் பொலிஸார்

தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்படுகின்றனவா என்பது தொடர்பாக சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரியவருகிறது.

பல்பொருள் அங்காடிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவைகள் என்பனவற்றில் தனிமைப்படுத்தல் சட்டங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் முகக்கவசம் அணிந்திருக்கின்றார்களா, சமூக இடைவெளி பேணப்படுகின்றதா, ஏனைய தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்படுகின்றனவா என்பவை தொடர்பில் பொலிஸார் கண்காணிக்க உள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட போது மக்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களை உரிய முறையில் பின்பற்றவில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்குமாறும், சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாறும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

# செவிநுகரக் கவிதந்த கவியரசன் நீயன்றோ!

இன்று கண்ணதாசனின் நினைவு தினத்தையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்திரேலியா

கண்ணதாசன் கவிதைக்கு கற்கண்டே தோற்றுவிடும்
அவ்வளவு சுவையினையும் அவனளித்து நின்றானே
காதலினைப் பாடிவிடின் காமனுமே வந்திடுவான்
தேமமதுரத் தமிழாலே திசைநுகரக் கவிதந்தான்

பாவாணர் மத்தியிலே பக்குவமாய்க் கவிதந்தான்
பாரதிரக் கவிதந்த பாரதிக்கு மகனானான்
ஓவியமாய்க் கவிதந்தான் உயிர்ப்புடனும் கவிதந்தான்
சேமமுற வாழ்வதற்கும் சீராகக் கவிதந்தான்

நாத்தீகம் பேசிநின்ற நாட்களை நாமொதிக்கிவிடின்
ஆத்திகம் தானவனை அனைவர்க்கும் காட்டியது
சிறுகூடல் பட்டியிலே சிரித்து விளையாடியவன்
சிந்தனைக்குக் கவிதைதரும் சிறப்பினையே பெற்றுவிட்டான்

வேதக் கருத்தையெல்லாம் விளக்கியே கவிதந்தான்
சாதலுக்கும் விளக்கம்தந்து தத்துவமாய் கவியளித்தான்
நோதலுக்கும் ஒத்தடமாய் நுட்பமாய்க் கவிதந்தான்
போதிக்கும் அவன்கவிதை புதுக்கருத்தாய் மிளிர்ந்ததுவே

சொத்துக் குவிப்பதனை சுகமாகக் கொள்ளாமல்
வித்தகனாய் இருப்பதையே விருப்பமா யவன்கொண்டான்
வர்த்தகச் சினிமாவில் மாட்டாமல் இருந்திருப்பின்
வைகத்தை வாழ்விக்க வந்திருப்பான் கம்பனைப்போல்

அரசியலை எறிந்துவிட்டு ஆன்மீகம் நாடியதால்
அவனின்று சமூகத்தின் அரவணைப்பில் நிற்கின்றான்
அர்த்தமுள்ள இந்துமதம் அவன்தந்த மருந்தாகும்
அத்தனையும் எங்களுக்கு அருளுள்ள விருந்தாகும்

கவியரசு கண்ணதாசா காலமெலாம் வாழுகிறாய்
தமிழுலகில் உன்கவிதை தானுரமாய் நிற்குமையா
செவிநுகரக் கவிதந்த கவியரசன் நீயன்றோ
புவிமுழுதும் உன்கவிதை புகழோடு திகழுமையா

# இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக நிஹால் பதவியேற்பு




இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக நிஹால் கெப்பெடிபொல பதவியேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் துறைமுக அதிகார சபையின் 27 ஆவது தலைவராக நிஹால் கெப்பெடிபொல நியமிக்கப்பட்டார்.

வணிக ரீதியான கப்பல் துறை நிபுணரான அவர், 2015 ஆம் ஆண்டு வரை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் செயற்பட்டார்.

ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்னாயக்கவின் இடமாற்றத்தைத் தொடர்ந்து, அந்த இடத்துக்கு புதிய தலைவராக நிஹால் கெப்பெடிபொல நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாவனைக்கு உதவாத 700 கி. கிராம் கோழி இறைச்சியுடன் ஒருவர் கைது!



மனித நுகர்வுக்கு தகுதியற்ற 700 கிலோ கிராம் கோழி இறைச்சியை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி 700 கிலோ கிராம் கோழி இறைச்சியைப் பாதுகாப்பற்ற முறையிலும், நுகர்வோர் பயன்படுத்த முடியாத நிலையில் கொண்டு சென்ற போது வவுனியா ஈரட்டை பகுதியில் வைத்து கோழி இறைச்சி கொண்டுவந்த உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையோடு சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# சட்டவிரோத ஏற்றுமதிக்குத் தயாராகவிருந்த ஒரு தொகை சங்குகள் புத்தளத்தில் பறிமுதல்



கொழும்பு, ஜூன் 24

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யத் தயாராகவிருந்த 33 ஆயிரத்து 680 சங்குகள் இலங்கை சுங்கப் பிரிவு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புத்தளம் பகுதியில் வைத்தே ஒரு தனியார் நிறுவனத்தால் சங்குகளின் பங்குகளை கொள்கலன்களின் அடைத்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முற்படுகையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் திணைக்களத்தால், ஏற்றுமதி உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர சங்கு ஓடுகளை ஏற்றுமதி செய்வது தடை விதிக்கப்பட்டுள்ளது.

70 மி.மீ. இற்கும் குறைவான விட்டம் கொண்ட சங்கு ஓடுகளை வைத்திருத்தல், வாங்குவது, காட்சிப்படுத்துதல், விற்பனை செய்தல், போக்குவரத்து அல்லது ஏற்றுமதி செய்வதையும் இந்த சட்டம் தடை செய்கிறது.

பறிமுதல் செய்யப்பட்ட 33 ஆயிரத்து 680 சங்குகளில் 21 ஆயிரத்து 480 பங்குகள் 70 மி.மீக்கும் குறைவான விட்டம் கொண்டவை என்று சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2021இல் வெளியிடப்பெற்றது.